# 02

# நபிமார்களின் பணிகள்

அல்லாஹ்வின் கட்டளைகளைப் பூமியில் நிலைநாட்டுவதற்காக, மனித இனம் தோன்றியது முதல் நல்ல மனிதர்கள் பலர் தெரிவு செய்யப்பட்டார்கள். அவர்களுக்கு அல்லாஹ் விடமிருந்து வழிகாட்டல்கள் வந்து கொண்டிருந்தன. அவர்களையே நபிமார்கள் என்கிறோம்.

நபிமார்களுள் சிலரைப் பற்றி முன்னைய வகுப்புக்களில் படித்திருக்கின்றீர்கள். இப்போது இப்றாஹீம் (அலை), மூஸா (அலை), ஈஸா (அலை) ஆகிய மூன்று நபிமார்களது வரலாறுகளையும் பணிகளையும் சுருக்கமாக அறிந்து கொள்வோம்.

## இப்றாஹீம் (அலை)

மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து விறகு சேகரிக்கின்றனர். அவ்விறகின் மூலம் பெரும் தீக்குண்டமொன்று தயார் செய்யப்படுகிறது. நெருப்பு தொடர்ந்து எரிகின்றது. அதில் ஓர் இளைஞர் தூக்கி எறியப்படுகின்றார். என்ன ஆச்சரியம்! அந்த இளைஞரை அந்த நெருப்பு எதுவுமே செய்துவிடவில்லை. நெருப்பு அணைந்து விடுகின்றது. இளைஞர் பாதுகாப்பாக இருப்பதைப் பார்த்து அனைவரும் அதிசயிக்கின்றனர். ஆனால் படிப்பினை பெறத் தவறி விடுகின்றனர்.

அந்த இளைஞர்தான் இப்றாஹீம் (அலை) ஆவார். அவர்கள் சிலைகளை உருவாக்கி விற்பனை செய்கின்ற ஒரு குடும்பத்தில் பிறந்தார்கள். தன் குடும்பத்தினரும் சூழ உள்ளவர்களும் அவற்றை வணங்குவதனைக் கண்டார்கள். இவ்வணக்கம் பிழையானது என உணர்ந்தார்கள். எனவே அதிலிருந்து முற்றாக விலகியிருந்தார்கள். தனது தந்தையையும் சமூகத்தையும் அதனை விட்டு விலகி, அல்லாஹ் ஒருவனையே வணங்குமாறு அழைத்தார்கள். அவ்வாறு தொடர்ந்து பிரசாரம் செய்தபோது அவர்கள் எதிர்கொண்ட ஒரு சோதனைதான் இது. அவ்வேளை அல்லாஹ்வின் உதவி அவர்களுக்குக் கிடைத்தது. எனவே எந்தத் தீங்கும் அவர்களுக்கு ஏற்படவில்லை.

''நாம் கூறினோம். நெருப்பே! நீ இப்றாஹீமுக்கு குளிர்ச்சியாகவும் சாந்தமாகவும் ஆகிவிடு. அவர்கள் இப்றாஹீமுக்கு தீங்கு செய்ய நாடினார்கள். ஆனால் நாம் அவர்களைத் தோல்வியுறச் செய்தோம்'' (அல்குர்ஆன் 21:69-70)

தடைகளைக் கண்டும் தளராத இப்றாஹீம் (அலை) அவர்கள் தமது பணியைத் தொடர்ந்தார்கள். அக்காலத்தில் நும்றூத் என்றொரு மன்னன் ஆட்சி செய்து கொண்டிருந்தான்.

அவன் ஒரு கொடுங்கோலன். இப்றாஹீம் (அலை) அவர்கள் அவனை இறைவன் பால் அழைத்தார்கள். ஆனால் எவ்வளவு விளக்கியும் அவன் அவ்வழைப்பை ஏற்கவில்லை. பதிலாக நபி இப்றாஹீம் (அலை) அவர்களுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தான்.

தான் பிறந்து வளர்ந்த பிரதேசமாகிய பபிலோனில் (இன்றைய ஈராக்) தனது பிரசாரம் வெற்றியளிக்காதபோது அவர்கள் அங்கிருந்து பாலஸ்தீன், எகிப்து, அரேபியா எனப் பல இடங்களுக்கும் ஹிஜ்ரத் செய்தார்கள். எங்கு சென்றபோதும் அவர்கள் தமது பணியை விட்டுவிடவில்லை.

இப்றாஹீம் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் அருள்புரிந்தான். அவர்களுடைய புதல்வர்கள் இருவரை நபிமார்களாகத் தேர்ந்தெடுத்தான். மனைவி ஹாஜர் (அலை) அவர்களுக்குப் பிறந்த குழந்தையான இஸ்மாஈலும் (அலை), மனைவி சாரா (அலை) அவர்களுக்குப் பிறந்த குழந்தை இஸ்ஹாக்குமே (அலை) அவர்களாவர்.

இப்றாஹீம் (அலை) அவர்கள் தமது மைந்தனான இஸ்மாஈல் (அலை) அவர்களோடு இணைந்து கஃபாவைக் கட்டினார்கள். உம்ரா, ஹஜ் ஆகிய கடமைகள் அவர்களது வரலாற்றை எமக்கு ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

## இப்றாஹீம் (அலை) அவர்களது வாழ்வு தரும் படிப்பினைகள்

1. தாராள மனம்: தயாள சிந்தை

இப்றாஹீம் (அலை) அவர்களது பிரார்த்தனையை அவதானியுங்கள்.

''என் இறைவா! தொழுகையை நிலைநிறுத்துபவனாய் என்னை ஆக்குவாயாக! என் வழித்தோன்றல்களிலிருந்தும் (தொழுகையை நிலைநாட்டுபவர்களை) தோற்றுவிப்பாயாக!'' (அல்குர்ஆன் 14:40).

தமக்குப் பின்னால் வரவுள்ள தமது சந்ததிக்காகக் கூட பிரார்த்திக்கின்ற பெருமனம் அவர்களிடம் இருந்திருக்கிறது.

2. கொள்கைக்காக எதையும் செய்யும் துணிவு:

இப்றாஹீம் (அலை) குடும்பம், சமூகம், நாடு போன்ற அனைத்தையுமே தாம் ஏற்றுக் கொண்ட கொள்கைக்காக தியாகம் செய்தார்கள்.

3. முழுமையாக அல்லாஹ்வுக்கு கட்டுப்படல்:

இஸ்மாஈல் (அலை) அவர்களையும் மனைவி ஹாஜர் (அலை) அவர்களையும் ஜன சஞ்சாரமற்ற மக்கா பள்ளத்தாக்கில் விட்டு விட்டு வருமாறு சொல்லப்பட்டபோது அதற்குக் கட்டுப்பட்டார்கள். அவ்வாறே மகன் இஸ்மாஈல் (அலை) சம்பந்தமாக கண்ட கனவை நிறைவேற்ற முனைந்தார்கள்.

4. விருந்தாளிகளை உபசரித்தல்:

''பின்னர் அவர் விரைவாக தம் வீட்டாரிடம் சென்றார். (நெருப்பில் சுடப்பட்ட) கொழுத்த காளைக் கன்றைக் கொண்டு வந்து அதனை விருந்தினர் முன் வைத்தார் அதனை அவர்கள் புசிக்கவில்லை. ஆதலால் அவர்களை நோக்கி 'நீங்கள் புசிக்க மாட்டீர்களா?' என்று கேட்டார் (அல்குர்ஆன் 51: 26-27).

நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் விருந்தோம்பல் பண்பை மலக்குகள் இவ்வாறு சோதித்தார்கள்.

இவற்றை நாமும் எமது வாழ்வில் முன்மாதிரியாகக் கொள்வோம்.

## மூஸா (அலை)

நைல் நதியில் சிலர்குளித்துக் கொண்டிருந்தனர். அதில் ஒரு பெட்டி மிதந்து வருவதைக் கண்டனர். அதனை எடுத்துக் கரைக்கு கொண்டு வந்தனர். திறந்து பார்த்தனர். உள்ளே ஓர் அழகிய ஆண் குழந்தை இருந்தது. உடனே அப்பெட்டியோடு மன்னனின் மாளிகையை நோக்கி விரைந்தனர். மன்னன் பெட்டியைத் திறந்தான். குழந்தையைக் கண்டதும் கொலை செய்யுமாறு பணித்தான். ஆனால் மகா ராணியோ மறுப்புத் தெரிவித்தாள். குழந்தையை நாமே வளர்த்தெடுப்போம். அது எமக்கு பயனளிக்கும் என்று கூறினாள். அக்கருத்து மன்னனுக்கு சரியெனப்பட்டது. எனவே மன்னனின் மாளிகையில் அக்குழந்தை வளர்ந்து வந்தது.

எகிப்தை பிர்அவ்ன் என்றொரு மன்னன் ஆட்சி செய்தான்; தானே கடவுள் என வாதிடும் அளவுக்கு ஆணவம் கொண்டவனாகக் காணப்பட்டான். அவனது அநியாயங்களுக்கு உட்பட்ட ஒரு பிரிவினரே பனூ இஸ்ராஈல்கள். அவர்களில் பிறக்கின்ற ஒவ்வோர் ஆண் குழந்தையும் கொல்லப்பட வேண்டுமெனக் கட்டளையிடப்பட்டிருந்தது. ஏனெனில் அவர்களில் பிறக்கும் ஓர் ஆண் குழந்தை தனது ஆட்சிக்கு அச்சுறுத்தலாக அமையும் என சோதிடர்கள் கருத்துத் தெரிவித்திருந்தனர். எனவே மூஸா (அலை) அவர்கள் பிறந்தபோது அவரது தாயார் அவரை ஒரு பெட்டியில் இட்டு நைல் நதியில் விட்டுவிட்டார். பிறகு என்ன நடந்தது என்பதையே முன்னர் அறிந்து கொண்டீர்கள்.

மூஸா (அலை) அவர்கள் பிர்அவ்னின் மாளிகையில் வளர்ந்தார்கள். வாலிபத்தை அடைந்தார்கள். நகரத்தில் ஒரு மனிதனுக்கு உதவ எடுத்த முயற்சி உபத்திரவத்தில் முடிந்தது. எனவே மதியனுக்குச் சென்றார்கள்.

மத்யனில் தங்கியிருந்தபோது, ஷுஐப் (அலை) அவர்களது புதல்வியைத் திருமணம் செய்தார்கள். பத்து வருடங்களின் பின் மீண்டும் எகிப்துக்குத் திரும்பி வந்தார்கள். வரும் வழியில் இறைவனிடமிருந்து வஹீ அருளப்பட்டு நபியாகத் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

தமது தூதை எத்திவைக்க சகோதரரான ஹாரூன் (அலை) அவர்களோடு பிர்அவ்னிடம் சென்றார்கள். கைத்தடி பாம்பாக மாறுதல், கை பிரகாசித்தல் போன்ற அற்புதங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டன. எவ்வளவோ முயற்சித்தும் கூட பிர்அவ்ன் மூஸா (அலை) அவர்களது பிரசாரத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.

பிர்அவ்ன், மூஸா (அலை) அவர்களை மந்திரவாதி, சூனியக்காரன் என்றெல்லாம் தூற்றினான். அவர்களை முறியடிப்பதற்காக நாட்டின் நாலா பக்கங்களிலிருந்தும் மந்திரவாதிகளை வரவழைத்தான். மூஸா (அலை) அவர்களுக்கும் அம்மந்திரவாதிகளுக்கும் இடையே போட்டி நடாத்தப்பட்டது. அதில் மூஸா (அலை) அவர்களே வெற்றி பெற்றார்கள். அப்போது அம்மந்திரவாதிகள் மூஸா (அலை), தம்மைப் போன்ற ஒரு மந்திரவாதியல்ல. நிச்சயம் அவர்கள் இறைவனின் தூதர்தான் என ஏற்றுக் கொண்டனர்; ஈமான் கொண்டனர்.


**பிர்அவ்னின் சடலம்**

பிர்அவ்ன், மூஸா (அலை) அவர்களது பிரசாரம் விரிவடைவதைக் கண்டான். மூஸா (அலை) அவர்களையும் அவர்களது சமூகத்தையும் ஒழித்துக்கட்ட துணிந்தான். இச்செய்தி மூஸா (அலை) அவர்களை எட்டியது. அவர்கள் தனது சமூகத்தினரோடு அப்பிரதேசத்திலிருந்து வெளியேறினார்கள். இதனை அறிந்து கொண்ட பிர்அவ்ன் தனது சேனையோடு அவர்களைத் துரத்தி வந்தான். மூஸா (அலை) அவர்கள் தமது சமூகத்தோடு செங்கடலின் அருகே நின்றார்கள். பிர்அவ்னின் பெரும் படை பின்னால் துரத்தி வருகின்றது. இந்நிலையில் என்ன செய்வது? இறைவனின் கட்டளைப் பிரகாரம் தமது கைத் தடியை கடலில் அடித்தார்கள். கடல் பிரிந்து வழிகொடுத்தது. பின்னால் வந்த பிர்அவ்னும் அவனது படையும் கடலில் இறங்கி அவர்களைப் பின் தொடர முற்பட்டபோது கடல் இணைய அதில் மூழ்கடிக்கப்பட்டனர்.

## மூஸா (அலை) அவர்களது வாழ்வு தரும் படிப்பினைகள்

1. ஒரு சமூகத்தை இறைவழியில் வழிநடாத்தக் கடின உழைப்பு அவசியமாகும்.
2. உலகத்தில் அநியாயம் செய்பவர்கள் தமக்குத் தாமே இழிவையும் அழிவையும் தேடிக் கொள்வர். அகங்காரம் கொண்டு அநீதி இழைத்த பிர்அவ்ன் அழிக்கப் பட்டான். இன்றும் கூட அடுத்தவர்களுக்குப் படிப்பினையாக அமைவதற்காக அவனது உடல் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

   ‘‘எனினும், உனக்குப் பின்னால் வரக் கூடிய மக்களுக்குப் படிப்பினை தரும் சான்றாக விளங்கும் பொருட்டு இன்று உன் உடலை நாம் பாதுகாப்போம்’’ (அல்குர்ஆன் 10:92).

3. எத்தகைய சோதனைகள் வந்தபோதிலும் ஈமானை இழந்து விடக் கூடாது. பிர்அவ்ன் மூலம் எதிர்கொண்ட துன்பங்கள் எவையும் மூஸா (அலை) அவர்களது ஈமானில் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.
4. நான்தான் இறைவன் என வாதிட்ட பிர்அவ்னுக்கு தனது பிரசாரத்தை முன்வைப்பதில் காட்டிய நளினம், பிரசாரப் பணி எவ்வளவு அவதானமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்குச் சான்றாக அமைந்துள்ளது.

சமூக சீர்திருத்தப் பணியில் அயராது உழைத்த மூஸா (அலை) அவர்களின் முன்மாதிரிகளை நாமும் கடைபிடிப்போம்.

## ஈஸா (அலை)

ஒரு குழந்தை தொட்டிலில் இருக்கிறது. அதன் தாயை மக்கள் இழிவாகப் பேசுகின்றனர்; தகாத ஒரு செயலைச் செய்து விட்டதாகக் குற்றம் சுமத்துகின்றனர். அவ்வேளை, அக்குழந்தை அழகாகக் கதைக்கிறது. தான் அல்லாஹ்வின் தூதன் என்கிறது. தன் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்புக்களை எடுத்துக் கூறுகிறது. தன் தாய் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டு பிழையானது எனக் கூறுகிறது. மக்கள் அதிசயிக்கின்றனர். அதன் பின் குழந்தையின் தாயைத் தூற்றுவது தடைப்படுகின்றது.

அக்குழந்தை யார் என நீங்கள் அறிவீர்களா? அவர்தான் ஈஸா (அலை). அவர்களது பிறப்பு அற்புதமானதாக அமைந்திருந்தது. தந்தை இல்லாமலே அவர்கள் பிறந்தார்கள். தொட்டிலில் இருந்த வண்ணமே தனது தாய் மர்யம் அவர்களைத்தூற்றுபவர்களுக்குப் பதில் கொடுத்தார்கள். அல்குர்ஆனில் 19 ஆம் அத்தியாயத்தின் முதல் 37 வசனங்களிலும் இந்த நிகழ்ச்சி விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

ஈஸா (அலை) அவர்களுக்கு பல அற்புதங்கள் வழங்கப்பட்டிருந்தன.

''நான் உங்கள் முன் களிமண்ணிலிருந்து பறவையின் உருவத்தைப் போல் செய்து அதில் ஊதுவேன். அது அல்லாஹ்வின் கட்டளையினால் பறவையாகி விடும். மேலும் நான் அல்லாஹ்வின் உதவி கொண்டு பிறவிக் குருடனையும் வெண்குஷ்டமுடையவனையும் குணமாக்குவேன். இன்னும் இறந்தவர்களை அவனது அனுமதி கொண்டு உயிர் பெற்றெழச் செய்வேன். (அது மட்டுமன்று), நீங்கள் உண்பவற்றையும் உங்கள் இல்லங்களில் சேமித்து வைப்பவற்றையும் உங்களுக்கு அறிவிப்பேன்'' (அல்குர்ஆன் 3:49).

ஈஸா (அலை) அவர்களை ஏற்று, பிரசாரப் பணியில் பக்கபலமாக நின்றோர் 'ஹவாரிய்யூன்' எனப்படுகின்றனர்.

எதிரிகள் ஈஸா (அலை) அவர்களைக் கொலை செய்வதனூடாகப் பிரசாரப் பணிக்கு முற்றுப்புள்ளி வைக்க முனைந்தனர். அப்போது அல்லாஹ் அவர்களை வானுக்கு உயர்த்திக் கொண்டான்.

உலக அழிவுக்கு முன் ஈஸா (அலை) அவர்கள் இறங்கி வருவார்கள். அவர்களே தஜ்ஜாலை கொலை செய்வார்கள். நல்லாட்சி புரிவார்கள். பின் மரணிப்பார்கள்.

''அவர் பூமியில் நாற்பது வருடங்கள் தங்கியிருப்பார். பின்னர் மரணிப்பார். முஸ்லிம்கள் அவருக்காக ஜனாஸா தொழுவார்கள்'' (அபூதாவூத்)

## ஈஸா (அலை) அவர்களது வாழ்வு தரும் படிப்பினைகள்

1. அநியாயமாகக் குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு இறைவனின் உதவி என்றும் உண்டு.
2. அல்லாஹ்வின் தீனுக்கு உதவியாளர்கள் தேவை.
3. ஈஸா (அலை) அவர்களது பிறப்புப் போன்றே இறப்பும் வித்தியாசமானது.

இப்றாஹீம் (அலை), மூஸா (அலை), ஈஸா (அலை) ஆகியோர்களது வாழ்க்கைக் குறிப்புக்களையும், வாழ்வு தரும் முன்மாதிரிகளையும் கற்றுக் கொண்டோம். அவற்றை எமது வாழ்விலும் கடைபிடித்தொழுகுவோம்.

**பயிற்சி:**

1. இப்றாஹீம் (அலை) அவர்களது தியாகத்தை எடுத்துக் காட்டும் ஒரு சம்பவத்தை எழுதுக.
2. மூஸா (அலை) அவர்களது வாழ்விலிருந்து எமக்குக் கிடைக்கின்ற முக்கியமான சில படிப்பினைகளைக் குறிப்பிடுக.
3. ஈஸா (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட அற்புதங்களைத் தொகுத்து எழுதுக.